# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1799 - 2013 පෙබරවාරි මස 22 වැනි සිකුරාදා - 2013.02.22

*1799 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 486 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மாச்சு மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானிகளை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

### மாகாண சபை அறிவித்தல்

*கிழக்கு மாகாண சபையின் 2009/02 ஆம் இலக்க மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தொடர்பான ஏற்பாட்டின் 11(8) கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றன.*

*இக்கட்டளை 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி செயல்வலுப்பெறும்.*

*விமலவீர திசாநாயக்க,*
*கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி*
*அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சர்,*
*கிழக்கு மாகாண சபை,*

*கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி*
*அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சு,*
*கிழக்கு மாகாண சபை,*
*திருகோணமலை.*
*2013, சனவரி 31.*

*கிழக்கு மாகாண சபையின் 2009/02 ஆம் இலக்க மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தொடர்பான ஏற்பாட்டின் 11(8) கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றன.*

*இக்கட்டளை 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி செயல்வலுப்பெறும்.*

*விமலவீர திசாநாயக்க,*
*கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி*
*அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சர்,*
*கிழக்கு மாகாண சபை,*

*கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி*
*அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சு,*
*கிழக்கு மாகாண சபை,*
*திருகோணமலை.*

*2013, சனவரி 31.*

### விதி முறைகள்

1. *இவ்விதிமுறைகள் கிழக்கு மாகாண சபையின் கிழக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபை, இல. 01, 2013 இனது முச்சக்கர வண்டிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை விதிமுறைகள் என்று அழைக்கப்படுவதுடன் ............. அன்று முதல் அமுலுக்கு வரும்.*

2. *............... ஆந் திகதி முதல் எவரும் கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றியோ, அல்லது இவ்வதிகார சபையில் பதிவு செய்து கொள்ளாமலோ, பயணிகளை தனிப்பட்ட ரீதியில் பணம் பெற்றுக் கொண்டு போக்குவரத்தில் ஈடுபடுவது அல்லது வாடகைக்கு அமர்த்துதல் போன்ற வகையில் செயற்படுவது அனுமதிக்கப்படமாட்டாது.*

3. *குறித்த முச்சக்கர வண்டியின் உரிமையாளராக இல்லாத பட்சத்தில் அவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது.*

4. *அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்போது குறித்த உள்ளூராட்சி அதிகார சபைக்குக் கீழ் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.*

5. *இவ்வதிகார சபையானது அனுமதிப்பத்திரம் வழங்குதல், புதுப்பித்தல் ஒரு முச்சக்கர வண்டித் தரிப்பிடத்திலிருந்து இன்னொன்றிற்கு அதனை மாற்றுதல் அல்லது அவற்றிற்கான விண்ணப்பங்களை நிராகரித்தல் போன்ற உரிமைகளை கொண்டிருக்கும்.*

5.1 இவ்வாறான அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அதிகார சபையானது பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்:-

(அ) குறித்த காலத்தில், குறித்த முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தில் செயற்படும் முச்சக்கர வண்டிகள் பிரயாணிகளின் போக்குவரத்துத் தேவைகளை எந்த அளவிற்கு பூர்த்தி செய்கின்றன என்ற விடயம்.

(ஆ) குறித்த காலத்தில், குறித்த முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தில் செயற்படும் முச்சக்கர வண்டிகள் பிரயாணிகளின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குதல் பொருத்தமற்றது.

(இ) முச்சக்கர வண்டி தரிப்பிடம் அமைந்துள்ள உள்ளூராட்சி பிரதேசத்தில் புதிய அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்பொழுது அப்பிரதேசத்தில் வசிக்கும் முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6. அனுமதிப்பத்திரமொன்றினைப் பெறுவதாயின் அதனை புதுப்பிப்பதாயின் அல்லது அதில் திருத்தம், மாற்றம் என்பன செய்வதாயின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரினால் அல்லது கம்பனியொன்றாயின் அதன் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் (இணைப்பு 01) ஒரு மாத காலத்தினுள் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். பின்வரும் ஆவணங்களும், கட்டணமும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:-

6.1 முச்சக்கர வண்டியின் பதிவுச் சான்றிதழ் அல்லது வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் பதிவின் விபரங்கள் என்பன இதில் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் இதன் போட்டோ பிரதி ஒன்றும்,

6.2 முச்சக்கர வண்டியின் மூன்றாம் பகுதியுடனான முழுக் காப்புறுதிப் பத்திரம் மற்றும் முச்சக்கர வண்டியில் பயணிப்போருக்கான வரையறையற்ற காப்புறுதிப்பத்திரம்.

6.3 வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் அதன் போட்டோ பிரதி.

6.4 சொத்துனரின் வைத்தியச் சான்றிதழ் மற்றும் அதன் போட்டோ பிரதி.

6.5 அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமாயின் அனுமதிப்பத்திரப் புத்தகம்.

6.6 அதிகார சபையினால் அறவிடப்படும் கட்டணம்.

6.7 வேறு மாகாணத்தில் முச்சக்கர வண்டி பதிவு செய்யப்பட்டதாயின் அம்மாகாணத்தின் விடுப்பு பத்திரம்.

6.8 அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்ட முச்சக்கர வண்டி ஓட்டுநர் சங்கம் அல்லது கம்பனியில் வகிக்கும் அங்கத்துவ அத்தாட்சிப்பத்திரம்.

7. அனுமதிப்பத்திரமானது இதனடியிலுள்ள இணைப்பு இரண்டில் உள்ளவாறான படிவத்தில் அமைந்திருக்கும்.

8. அனுமதிப்பத்திர ஒட்டு (லேபல்) அட்டை இதனடியிலுள்ள இணைப்பு மூன்றில் உள்ள படிவத்தில் அமைந்திருக்கும்.

9. அதிகார சபையால் அறவிடப்படும் கட்டணமானது இதனடியிலுள்ள இணைப்பு நான்கில் உள்ளவாறு அமையும்.

10. பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திர விண்ணப்பம் விண்ணப்பதாரி அனுமதிப்பத்திரம் செயற்பட வேண்டி நிற்கும் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குக் குறையாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

11. அனுமதிப்பத்திரமானது கீழ்வரும் நிபந்தனைகளையும் விதி முறைகளையும் கொண்டிருக்கும்:-

11.1 அனுமதிப்பத்திரம் மாறத்தகாதது.

11.2 அனுமதிப்பத்திரத்தில் வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் ஒழிய, அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட தினத்திலிருந்து 12 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

11.3 முச்சக்கர வண்டியின் சாரதி அனுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதியையும், அட்டையினையும் முச்சக்கர வண்டியில் எடுத்துச் செல்ல வேண்டும்.

11.4. அதிகார சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர அட்டை முச்சக்கர வண்டியின் இடது பக்க கண்ணாடித்திரையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

11.5 அனுமதிப்பத்திர உரிமையாளரும் அவரது ஊழியரும் சேவையில் ஈடுபடுத்தப்படும் முச்சக்கர வண்டியினை நல்ல பொறிமுறை நிலையிலும், சுத்தமாகவும் நல்ல ஓடும் நிலையிலும் வைத்துக் கொள்ள வேண்டும்.

11.6 மேற்சொன்ன நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, இங்கு குறிப்பிடப்படும் ''அனுமதிப்பத்திர உரிமையாளரின் பொறுப்புக்கள்'' மற்றும் ''முச்சக்கர வண்டியின் சாரதிக்கான பொறுப்புக்கள்'' என்பனவும் இவ்வனுமதிப்பத்திரத்திற்கான நிபந்தனைகள் எனக் கருதப்பட வேண்டும்.

**12. முச்சக்கர வண்டியில் காட்சிப்படுத்தப்பட வேண்டியதும் எடுத்துச் செல்லப்பட வேண்டியதுமான பொருட்கள்:-**

12.1 **ஓட்டுநரால் முச்சக்கர வண்டியில் எடுத்துச் செல்லப்பட வேண்டியவை.**

(அ) அனுமதிப்பத்திர மூலப்பிரதியும் அட்டையும்;
(ஆ) ஓட்டுநரின் வைத்தியச் சான்றிதழ்;
(இ) அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்ட கட்டண அட்டவணை ;
(ஈ) வாகனப் போக்குவரத்து சட்டத்தின் கீழ் எடுத்துச் செல்லப்பட வேண்டியவை.

(I) வருமான வரி அனுமதிப்பத்திரம் ;
(II) காப்புறுதிச் சான்றிதழ் ;
(III) சாரதி அனுமதிப்பத்திரம்.

12.2 **காட்சிப்படுத்தப்பட வேண்டியவை :**

(அ) பயணிகள் சேவை அனுமதி அட்டையின் புகைப்பட பிரதி;
(ஆ) முச்சக்கர வண்டியினுள் 'புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது' என்ற அறிவித்தல்;
(இ) அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டண அட்டவணை ;
(ஈ) அதிகார சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர இலக்கம், மற்றும் முச்சக்கர வண்டியின் பதிவிலக்கம்.

**13. அனுமதிப்பத்திர உரிமையாளரின் பொறுப்புக்கள்:**

13.1 முச்சக்கர வண்டி இயக்குநர்கள் சங்கத்தின் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக அனுமதிப்பத்திர உரிமையாளர் முச்சக்கர வண்டியினை சேவையிலீடுபடுத்த வேண்டும்;

13.2 முச்சக்கர வண்டி சம்பந்தமாக ஏதாவது விபத்துக்கள் ஏற்படின், அது சம்பந்தமாக சங்கத்தினூடாக அதிகார சபைக்கு ஏழு நாட்களுக்குள் அறிவிக்கப்பட வேண்டும்;

13.3 கடுமையான அல்லது உயிராபத்தான விபத்தாயின், புதிய ஒரு தகுதிச் சான்றிதழ் பெற்றாலொழிய சேவையில் ஈடுபடுத்தப்படக்கூடாது ;

13.4 வைத்தியச்சான்றிதழ் மூலம் பொருத்தமானவர் என்ற சிபார்சு செய்யப்பட்டாலொழிய பாரதூரமான அல்லது உயிராபத்தை விளைவிக்கும் விபத்தொன்றுக்குப் பொறுப்பாயிருந்த ஓட்டுநர் மீண்டும் சேவையில் அனுமதிக்கப்படக்கூடாது. (பாரதூரமான விபத்தென்பது இதில் காயப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் 7 நாட்களுக்கு மேல் சிகிச்சைப் பெறல் அல்லது குறித்த உடமையின் சேதம் ரூபா 10,000 இனை விட அதிகமாக இருத்தல். விபத்தொன்றில் நான்கு சக்கரங்களும் பாதையை விட்டு அகன்றிருப்பின் அதுவும் பாரதூரமான விபத்தொன்றாகவே கருதப்படும். உயிராபத்திற்குரிய விபத்தென்பது, விபத்துக்குள்ளான நபர் அவ்விடத்தில் உயிரிழத்தல் என்பதைக் கருதும்).

**14. முச்சக்கர வண்டி சாரதியின் பொறுப்புக்கள் :**

14.1 முச்சக்கர வண்டியில் பயணிக்கும் அனைத்து பயணிகளினதும் பாதுகாப்பு, சௌகரியம் என்பவற்றை நிச்சயிக்கும் விதத்தில் முச்சக்கர வண்டியினைச் செலுத்த வேண்டும் ;

14.2 குறிப்பிட்ட பயணிகள் எண்ணிக்கையை விடக் கூடுதலாக ஏற்றிச் செல்லக்கூடாது ;

14.3 நன்னடத்தையுள்ளவராகவும், பயணிகள், பொது மக்கள் மற்றும் ஏனைய அதிகாரிகள் பால் கரிசனை மற்றும் நற்பழக்கமுள்ளவராகவும் இருக்க வேண்டும்.

14.4 வாகனத்தை செலுத்தும்போது அல்லது கடமை நேரத்தில் மது மற்றும் ஆபத்தான ஔடதங்களை பாவித்தல் கூடாது;

14.5 வாகனத்தை பொறுப்பற்ற விதத்தில் கவனயீனமாக அல்லது ஆபத்தான முறையில் செலுத்தக்கூடாது;

14.6 அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட ஓட்டுநராக இருத்தல் வேண்டும்;

14.7 ஓட்டுநர் சங்கத்தினால் விதந்துரைக்கப்பட்ட இடத்தில் வானகத்தை நிறுத்தி வைப்பதுடன் தரிப்பிடத்தின் செயற்பாடுகளுக்கு தடங்கல் ஏற்படுத்தும் விதத்தில் வாகனத்தை நிறுத்தி வைக்கக்கூடாது;

14.8 ஓட்டுநர் கடமையில் ஈடுபடும் வேளைகளில் சீருடையினை அணிந்திருக்க வேண்டும்;

14.9 தவிர்க்கமுடியாத காரணங்களினால் பயணிகளை உடன்பட்ட இடங்களுக்கு எடுத்துச் செல்வதில் இயலாமை ஏற்படும் பட்சத்தில், அதாவது விபத்து, தொழில்நுட்பக் கோளாறு என்பவற்றால் இவ்வாறு நிகழ்ந்திருப்பின் குறித்த ஸ்தானத்திற்கு மாத்திரமே கட்டணம் அறவிடப்பட வேண்டும். அத்துடன் பயணியினது போக்குவரத்தை தொடர்ந்து மேற்கொள்ளத் தேவையான அனைத்து முயற்சிகளையும் காண்பதற்கான நடவடிக்கைகளை ஓட்டுநர் எடுக்க வேண்டும்;

14.10 அதிகார சபையினால் விதிக்கப்படும் கட்டணத்திற்கு கூடுதலாகவோ குறைவாகவோ கட்டணத்தை அறவிடக்கூடாது.

14.11 முச்சக்கர வண்டியினுள் புகைப்பதற்கு எவரையும் ஓட்டுனர் அனுமதிக்கக்கூடாது.

15. **பயணிகளின் பொறுப்புக்கள் :**

15.1 பயணிகள் முச்சக்கர வண்டியினுள் புகைக்கவோ மது அருந்தவோ அல்லது ஆபத்தான ஔடதங்களைப் பயன்படுத்தவோ கூடாது;

15.2 முச்சக்கர வண்டியினுள் பயணிகள் மரியாதையான முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

16. **முச்சக்கர வண்டி இயக்குநர்கள் சங்கங்களுக்கான விதிமுறைகள் :**

16.1 கம்பனிச் சட்டம் அல்லது கூட்டுறவுச் சங்கச் சட்டம் என்பவற்றிற்குக் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து முச்சக்கர வண்டி இயக்குநர்கள் அமைப்பு ஒன்று இருக்க வேண்டும் ;

16.2 அனைத்து இயக்குநர்களும் இங்கு கூறப்பட்ட விதிமுறைகளுக்குகேற்ப செயற்படுகின்றார்கள் என்பதை நிச்சயித்துக் கொள்ளும் பொறுப்பு அவ்வமைப்புக்குரியதாகும்;

16.3 இவ்விதிமுறைகளில் கூறப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதனை நிச்சயித்துக்கொள்ளும் முகமாக இவ்வமைப்புக்கள்அவசியமான விதிமுறைகளை தமது யாப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

17. **முச்சக்கர வண்டித் தரிப்பிடம் சம்பந்தமான விதிமுறைகள்:**

17.1 குறித்த உள்ளூராட்சி அதிகார சபையின் ஒத்திசைவோடு, இவ்வதிகார சபையானது குறித்த எண்ணிக்கையில் முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களை ஏற்படுத்தலாம்;

17.2 அதிகார சபையினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி, முச்சக்கர வண்டி தரிப்பிடம் சம்பந்தமான விடயங்களை முச்சக்கர வண்டி சங்கங்கள், கம்பனிகள் நிர்வகிக்க வேண்டும்;

17.3 இச்சங்கங்கள்/கம்பனிகள் உரிய கட்டணங்களை உரிய உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்த வேண்டும்.

18. ஓட்டுநரால் விடப்படும் தவறுகள், உத்தரவுப்பத்திரத்தின் உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்ட தவறுகளாகவே கருதப்படும்.

19. காலத்திற்குக் காலம் அதிகார சபையினால் விதந்துரைக்கப்படும் கட்டணங்களைச் சுட்டிக்காட்டும் கட்டண மானிகளை அனுமதிப்பத்திர உரிமையாளர் பொருத்திக் கொள்ள வேண்டும்.

20. ஒரு விண்ணப்பமானது மீளச் செல்லுபடியாக்குவதற்காக மேற்கொள்ளப்படும்போது அதிகார சபையானது பின்வரும் விடயங்களில் திருப்திகாணின் அவ்வனுமதிப்பத்திரத்தை ஒரு வருடத்திற்கோ அல்லது அதற்குக் குறைவான ஒரு காலப்பகுதிக்கோ நீடித்துக் கொடுக்கலாம்:-

I. விண்ணப்பதாரி கிழக்கு மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் விதி முறைகளுக்கேற்பவும் சட்டத்திட்டங்களுக்கேற்பவும் செயற்பட்டிருப்பாரெனின்;

II. குறித்த விண்ணப்பதாரி மேற்சொன்ன விதி முறைகளை மீறியதற்காக தண்டிக்கப்பட்டிருக்கவில்லை எனின்,

III. அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய அனைத்துக் கட்டணங்களையும் செலுத்தியிருப்பதுடன் முச்சக்கர வண்டி இயக்குநர்கள் சங்கத்தின் கட்டணங்களையும் செலுத்தி இருப்பதுடன் அவர்களால் விதிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளையும் திருப்திப்படுத்தி இருக்க வேண்டும்.

21. இவ்விதிமுறைகளை மீறும் ஒருவர், மோசடி செய்யும், புறக்கணிக்கும் ஒருவர் ஒரு குற்றம் புரிந்தவராகக் கருதப்படுவார்.

22. அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஒன்றிலோ அல்லது குழுவொன்றின் பரிசோதனையிலோ குறித்த விதி முறைகளை அதாவது அட்டவணை 05 (a), (b) என்பவற்றை சம்பந்தப்பட்டவர்கள் மீறியுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் அதிகாரசபையானது பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வலுவூட்டப்பட்டுள்ளது:-

(I) பரிசோதனையின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விதி முறைகள் மீறப்பட்டுள்ளது என்ற விடயம் மீண்டும் இடம் பெறாது என்பதுடன் அது சரி செய்து கொள்ளப்படும் என்ற வாக்குமூலமொன்றைப் பெற்றுக் கொள்ளல்;

(II) அட்டவணை 5(a) யின் கீழான விதி முறை ஒன்று மீறப்பட்டிருப்பின் ரூபா 200 ஐயும் அட்டவணை 5(b) மீறப்பட்டிருப்பின் ரூபா 400 இனையும் நிருவாக செலவீனங்களுக்காகவும் ஏனைய செலவீனங்களுக்காகவும் அறவிடல்;

(III) அனுமதிப்பத்திர உரிமையாளர் (I), (II) என்பவற்றின் கீழ் நடந்து கொள்ள உடன்படுபவராயின் கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை 2009 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பிரிவு 11(4) ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு அதிகாரம் கொண்டுள்ளதுடன் அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு எதிராக 44 ஆம் பிரிவின் கீழ் வழக்குத்தொடரவோ சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் இருப்பதற்கான அதிகாரத்தை கொண்டுள்ளது.

23. அனுமதிப்பத்திர உரிமையாளர் தான் விரும்பியவாறு அனுமதிப்பத்திரத்தை வேறொருவருக்கு மாற்றம் செய்யலாகாது. அவ்வாறு மாற்றம் செய்யின் அனுமதிப்பத்திரம் ஆனது செயலிழந்து விடும். மாறாக குறித்த பிரதேசத்தின் பயணிகள் தேவை நிமித்தம் அவ்வாறான மாற்றம் ஒன்று அவசியமாயின் அதிகார சபையானது அனுமதிப்பத்திரத்தின் உரிமையை மாற்றிக்கொடுக்கும்.

24. அதிகாரசபையானது அங்கீகரிக்கப்பட்ட முச்சக்கர வண்டி இயக்குநர்கள் சங்கமொன்றிற்கு அல்லது கம்பனியொன்றிற்கு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், முச்சக்கர வண்டிகளை சேவையில் ஈடுபடுத்தல், அவர்கள் பேண வேண்டிய அறிக்கைகள், மற்றும் அவர்கள் அதிகார சபைக்கு சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகள் என்பன சம்பந்தமாக அறிவுறுத்தல்களை வழங்கும்.

**பட்டியல் 1**

**கிழக்கு மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபை**

***முச்சக்கர வண்டி பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்***

01. முச்சக்கர வண்டி உரிமையாளர் தொடர்பான தகவல்கள் :- அலுவலக உபயோகத்திற்காக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

1. முச்சக்கர வண்டியின் இல. :-----.
1.1 முழுப்பெயர் :-----.
முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
1.2 முகவரி :-----.
1.3 தொலைபேசி இலக்கம் :-----.
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
1.5 விண்ணப்பதாரியின் வதிவிடம் :-
1.5.1 மாகாணம் :-----.
1.5.2 மாவட்டம் :-----.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

1.5.3 பிரதேச செயலாளர் பிரிவு :-----.
1.5.4 கிராம சேவகர் பிரிவு :-----.
1.5.5 விண்ணப்பதாரி அரச திணைக்களமொன்றில்/ கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச் சட்டசபையொன்றில்/ இராணுவ சேவையில் உள்ளவரா?
ஆம்/ இல்லை :-----.
1.5.6 "ஆம்" எனில் உரிய நிறுவனத்தின் பெயர் :-----.

1.6 விவாகமானவராயின் வாழ்க்கைத் துணையின் பெயரும் முகவரியும் :-----.

1.7 கிராம சேவகரின் அத்தாட்சி :
மேற்படி விண்ணப்பதாரியினால் மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி :-----.

.......................
கிராம அலுவலரின் ஒப்பம்

*1.8* உரிமையாளர் வேறு முச்சக்கர வண்டிக்காக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பின் கீழ்க் குறிப்பிடப்படும் விபரங்களைத் தருக:

| முச்சக்கர வண்டியின் பதிவிலக்கம் | பெற்றுக் கொண்ட நிறுவனம் | அனுமதிப்பத்திர இலக்கம் | திகதி |
|---|---|---|---|
| | | | |

*2.* முச்சக்கர வண்டி தொடர்பான தகவல்கள் :- அலுவலக உபயோகத்திற்காக

*2.1* முச்சக்கர வண்டியின் பதிவிலக்கம் | | | | | | | |

*2.2* (அ) தயாரித்த நாடு :-----.
(ஆ) ஆண்டு :-----.

*2.3* அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை : | | |

*2.4* தயாரித்த ஆண்டு : | | | | |

*2.5* இலங்கையில் முதன்முறையாக பதிவு செய்த திகதி :-

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

ஆண்டு மாதம் திகதி

*2.6* வாகனத்தின் பெறுமதி :-----.

*2.6.1* வாகனத்தின் எடை :-----.

*2.7* இம் முச்சக்கர வண்டிக்கு வேறு அதிகார சபையிலிருந்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ளதா ? (ஆம்/இல்லை)

*2.7.1* முச்சக்கர வண்டி தற்போது சேவையில் ஈடுபடுகின்றதா ? (ஆம்/இல்லை)

*2.7.2* அவ்வாறு சேவையில் ஈடுபடவில்லையாயின் கீழ்க் குறிப்பிடப்படும் விபரங்களைத் தருக.

| பெற்றுக் கொண்ட நிறுவனம் | அனுமதிப்பத்திர இலக்கம் | காலாவதியாகும் திகதி | அனுமதிப்பத்திரத்தின் கால நீடிப்பின்மைக்கான காரணம் |
|---|---|---|---|
| | | | |

*2.8* இம் முச்சக்கர வண்டி தொடர்பில் ஏதேனும் வகையில் வழக்கு விசாரணை உள்ளதா? (ஆம்/இல்லை)

அவ்வாறு இருப்பின் விபரங்களைத் தருக :-----.

*2.9* காப்புறுதி தொடர்பான விபரம் :-----.

*2.9.1* காப்புறுதி நிறுவனம்/கூட்டுத்தாபனம் :-----.

*2.9.2* காப்புறுதி வகை :

*1.* :-----.
*2.* :-----.
*3.* :-----.

2.9.3 காப்புறுதி பெறுமதி :-----. அலுவலக உபயோகத்திற்காக

2.9.4 காலாவதியாகும் திகதி :-----.

2.10 வருமான அனுமதிப்பத்திரம் காலாவதியாகும் திகதி :-----.

2.11 பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் :-----.

2.12 முச்சக்கர வண்டி நிறுத்திமிடம் :-----.

2.13 வீட்டிலிருந்து முச்சக்கர வண்டி நிறுத்துமிடம் வரையான தூரம் கி. மீ. :-----.

3. முச்சக்கர வண்டி சாரதி தொடர்பான தகவல்கள் :-

3.1 முழுப்பெயர் :-----.

3.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

3.3 பிறந்த திகதி :-----.

3.4 முகவரி :-----.

3.5 தேசிய அடையாள அட்டை இல. :-----.

3.6 முச்சக்கர வண்டி சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :-----.

3.6.1 அனுமதிப்பத்திரம் அங்கவீனமான சாரதி அனுமதிப்பத்திரமா என்பது பற்றி :-----.

3.6.2 பெறப்பட்ட திகதி :-----.

3.6.3 சாரதி அனுமதிப்பத்திரம் காலாவதியாகும் திகதி :-----.

3.7 மருத்துவச் சான்றிதழ் தொடர்பான தகவல்கள்:-

3.7.1 சான்றிதழ் இலக்கம் :-----.

3.7.2 வழங்கப்பட்ட திகதி :-----.

3.7.3 காலாவதியாகும் திகதி :-----.

3.8 கிழக்கு மாகாண வீதிப் பயணி போக்குவரத்து அதிகாரசபையினால் நடாத்தப்படும் முச்சக்கர வண்டி சாரதி பயிற்சிகளில் பங்குபற்றியுள்ளாரா ? (ஆம்/இல்லை)

3.9 முச்சக்கர வண்டி பயணிகள் சேவை அனுமதிப்பத்திர இலக்கம் :-----.

3.10 விபத்துக்கள் ஏற்பட்டிருப்பின் அது தொடர்பான தகவல்கள் :-----.

3.10.1 கடந்த 3 ஆண்டுகளில் விபத்து விபரம்

| மரணம் | பாரதூரமானது | மிகப் பெரியது |
|---|---|---|
| | | |

3.10.2 முடிவுறாத வழக்குகள் உள்ளனவா ? (ஆம்/இல்லை) அவ்வாறிருப்பின் அவை தொடர்பான விபரம்

| விபத்து நடந்த திகதி | | | |
|---|---|---|---|
| விபத்தின் தன்மை | | | |
| காயமடைந்தோர் எண்ணிக்கை | | | |
| மரணமடைந்தோர் எண்ணிக்கை | | | |
| சொத்துக்களுக்கான சேதம் ரூபா (அண்ணளவாக) | | | |

*3.10.3 விபத்தின் பின்னர் :-*

(அ) சாரதி மருத்துவ பரிசோதனைக்கு உட்பட்டுள்ளாரா ? (ஆம்/ இல்லை)

(ஆ) அவர் மீளாய்வு பயிற்சி நெறியில் பங்குபற்றியுள்ளாரா? (ஆம்/ இல்லை)

(இ) முச்சக்கர வண்டி சாரதி அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டதா ? (ஆம்/ இல்லை)
இரத்துச் செய்யப்பட்டதா ? (ஆம்/ இல்லை)

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதுமென உறுதியளிக்கின்றேன். மேலும், இந்த அனுமதிப்பத்திரம் தொடர்புடைய நிபந்தனைகள் மீறப்படும் பட்சத்திலோ அல்லது அதிகார சபையினாலோ அல்லது முச்சக்கர வண்டி சங்கத்தினாலோ அறிவுறுத்தலுக்கு அமைவாக செயற்படவில்லையாயின் எனது அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுவதற்கு/ இடைநிறுத்தப்படுவதற்கு/அதிகார சபையினால் அறவீடு விதிக்கப்படுவதற்கு அல்லது நியதிச் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படுவதற்கோ ஆளாவேன் என்பதை நன்கறிவேன்.

திகதி :-----.

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**அட்டவணை 2**

**கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை**

**முச்சக்கர வண்டி பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம்**

முச்சக்கர வண்டி பதிவு இலக்கம் :-----.

'கல்வி அமைச்சுக் கட்டடம்', உட்துறைமுக வீதி, திருகோணமலை

**2009 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் நியதிச் சட்டம்**

பயணிகளை முச்சக்கர வண்டியில் ஏற்றிச் செல்லல் தொடர்பான சேவையினை நடாத்துவதற்கான
அனுமதிப்பத்திரம் (III ஆம் அத்தியாயம்)

முச்சக்கர வண்டி ஒன்றிற்கு/முச்சக்கர வண்டி அமைப்புக்கு ஏற்புடையதாக வெளியிடப்படுகின்றது.

அனுமதிப்பத்திர இலக்கம் :-----,

1. முச்சக்கர வண்டியின் அனுமதிப்பத்திர இலக்கம் :-----,

2. உரிமையாளரின் /உரித்துடைய நிறுவனத்தின் பெயர் :-----,

3. உரிமையாளரின் /நிறுவனத்தின் முகவரி :-----,

4. இயைபுடைய மாவட்டம் :-----,

5. பிரதேச செயலாளர் பிரிவு :-----,

6. முச்சக்கர வண்டி நிறுத்தப்படும் இடம் :-----,

7. அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை :-----,

8. மேற்குறித்த முச்சக்கர வண்டியோ அல்லது அம் முச்சக்கர வண்டி சார்பாக இவ்வனுமதிப்பத்திரத்தில் வாகன வகையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளுள் ஒரு முச்சக்கர வண்டிக்கோ அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

9. இந்த அனுமதிப்பத்திரம் இதிலுள்ள III ஆம் பிரிவில் காணப்படும் நியமங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக வழங்கப்படும்.

10. இந்த அனுமதிப்பத்திரம் காலாவதியாகும் தினத்திலோ அல்லது போக்குவரத்து அதிகார சபைக்கு அவசியமேற்படின் அந்தத் தினத்திற்கு முன்னர் எச்சந்தர்ப்பத்திலுமோ அதிகார சபைக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்.
வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை,
கிழக்கு மாகாணம்.

திகதி :-----.

**முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர உரித்தான வாகனச் செலுத்துகை**

........... ஆம் இலக்கம் கொண்ட முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரத்திற்குரிய ....... மாவட்ட ......... பிரதேச செயலகப் பிரிவில் .............. என்ற இடத்தில் முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்தில் இணைக்கப்பட்டு பயணிகள் போக்குவரத்து சேவையினை நடாத்துவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

பணிப்பாளர் நாயகம்,
வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
கிழக்கு மாகாணம்.

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

லேபல் இலக்கம் :-----.

திகதி : -----.

---

**(திருத்தம்** I)

........... ஆம் இலக்கம் கொண்ட முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரத்திற்குரிய ....... மாவட்ட ......... பிரதேச செயலகப் பிரிவில் .............. என்ற இடத்தில் முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்தில் இணைக்கப்பட்டு பயணிகள் போக்குவரத்து சேவையினை நடாத்துவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

பணிப்பாளர் நாயகம்,
வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
கிழக்கு மாகாணம்.

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

லேபல் இலக்கம் :-----.

திகதி : -----.

---

**(திருத்தம்** II)

........... ஆம் இலக்கம் கொண்ட முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரத்திற்குரிய ....... மாவட்ட ......... பிரதேச செயலகப் பிரிவில் ............... என்ற இடத்தில் முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்தில் இணைக்கப்பட்டு பயணிகள் போக்குவரத்து சேவையினை நடாத்துவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

பணிப்பாளர் நாயகம்,
வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
கிழக்கு மாகாணம்.

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

லேபல் இலக்கம் :-----.

திகதி : -----.

**செல்லுபடியாகும் காலம**

........... ஆம் இலக்கம் கொண்ட முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரம் 20...... ஆம் ஆண்டு ...................... மாதம் .............. ஆந் திகதி தொடக்கம் 20........... ஆம் ஆண்டு.................... மாதம் ................ ஆந் திகதி வரையான காலத்திற்கு செல்லுபடியாகும்.

பணிப்பாளர் நாயகம்,
வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
கிழக்கு மாகாணம்.

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

லேபல் இலக்கம் :-----.

திகதி : -----.

---

**கால நீடிப்பு** /I

............... ஆம் இலக்கம் கொண்ட முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரம் 20......... ஆம் ஆண்டு.............. மாதம் ............. ஆந் திகதி வரையான காலத்திற்கு செல்லுபடியாகும்.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
கிழக்கு மாகாணம்.

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

லேபல் இலக்கம் :-----.

திகதி : -----.

---

**கால நீடிப்பு** /II

.............. ஆம் இலக்கம் கொண்ட முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரம் 20......... ஆம் ஆண்டு.............. மாதம் ............. ஆந் திகதி வரையான காலத்திற்கு செல்லுபடியாகும்.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
கிழக்கு மாகாணம்.

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

லேபல் இலக்கம் :-----.

திகதி : -----.

**கால நீடிப்பு** /III

.............. ஆம் இலக்கம் கொண்ட முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரம் 20......... ஆம் ஆண்டு.............. மாதம் ............. ஆந் திகதி வரையான காலத்திற்கு செல்லுபடியாகும்.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
கிழக்கு மாகாணம்.

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

லேபல் இலக்கம் :-----.

திகதி : -----.

---

**கால நீடிப்பு** /IV

.............. ஆம் இலக்கம் கொண்ட முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரம் 20......... ஆம் ஆண்டு.............. மாதம் ............. ஆந் திகதி வரையான காலத்திற்கு செல்லுபடியாகும்.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
கிழக்கு மாகாணம்.

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

லேபல் இலக்கம் :-----.

திகதி : -----.

---

வாகன வகைக்குரிய முச்சக்கர வண்டி தொடர்பான விபரம்

| பதிவிலக்கம் | அனுமதிப்பத்திர இல. (இருப்பின்) | பதிவிலக்கம் | அனுமதிப்பத்திர இல. (இருப்பின்) |
|---|---|---|---|
| | | | |

பதிவுகள்

| திகதி | விபரம் | கையொப்பம் |
|---|---|---|
| | | |

பதிவுகள்

| திகதி | விபரம் | கையொப்பம் |
|---|---|---|
| | | |

උපලේඛන - 03
*அட்டவணை - 03*
**Schedule - 03**

නැගෙනහිර පළාත් මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය
கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை
Eastern Province Road Passenger Transport Authority

**නිත්‍ය ත්‍රීරෝද රථ සේවා අවසර පත්‍රය**
**முச்சக்கரவண்டி நிரந்தர சேவை அனுமதிப்பத்திரம்**
**REGULAR THREE - WHEEL SERVICE PERMIT**

අවසර පත්‍ර අංකය / அனுமதிப் பத்திர இலக்கம் / Permit No.

ත්‍රීරෝද රථ අංකය / முச்சக்கரவண்டி இல. / Three- Wheel No.

නැවතුම්පොල / தரிப்பிடம் / Park

වලංගු කාලය / செல்லுபடி காலம் / Validity

සිට / முதல் / From

දක්වා / வரை / To

ප්‍රා ලේ කොට්ඨාශය / பி. செ. பிரிவு / D. S. Division

පොලිස් බල ප්‍රදේශය / பொலிஸ் பிரிவு / Police Area

දිස්ත්‍රික්කය / மாவட்டம் / District

දිනය / திகதி / Date

අධ්‍යක්ෂ ජනරාල් නැගෙනහිර පළාත් මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය
பணிப்பாளர் நாயகம் கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை
District General Eastern Province Road Passenger Transport Authority.

**இணைப்பு 4**

**அதிகாரசபையினால் அறவிடப்படும் கட்டணங்கள்**

1 இச்சட்டம் முச்சக்கர வண்டி பிரயாணிகள் போக்குவரத்து சட்டம் எனும் பெயரில் அழைக்கப்படும்.

2. இவ்விணைப்பில் நிரல் 1 இல் குறிப்பிடப்படுவது கட்டணம் அறவிடப்படும் சந்தர்ப்பங்களும் நிரல் 2 இல் அதற்குரிய கட்டணமும்

| | நிரல் 1<br>சந்தர்ப்பங்கள் | நிரல் 2<br>செலுத்தப்பட வேண்டிய தொகை<br>ரூபா ச. |
|---|---|---|
| 1. | அனுமதிப்பத்திர விண்ணப்பப்படிவம் | 100 0 |
| 2. | அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் | 500 0 |
| 3. | அனுமதிப்பத்திரம் காலாவதியான பின்னர் செலுத்தப்பட வேண்டிய தண்டப் பணம் 10 அதிகார சபையினால் அறவிடப்படும் | |
| 4. | அனுமதிப்பத்திர புத்தகம் தவறினால் புதிய புத்தகத்திற்கான தொகை | 500 |
| 5. | அனுமதிப்பத்திர புத்தகத்தின் பக்கம் முடிவுற்றால், பழுதடைந்தால் புதிய அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு | 250 0 |
| 6. | அனுமதிப்பத்திர லேபல் | 200 0 |
| 7. | அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு | 1,500 0 |
| 8. | அனுமதிப்பத்திரம் வேறு நபருக்கு பெயர் மாற்றம் | 500 0 |

| | நிரல் 1<br>சந்தர்ப்பங்கள் | நிரல் 2<br>செலுத்தப்பட வேண்டிய தொகை<br>ரூபா ச. |
|---|---|---|
| 9. | அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு மரணம் ஏற்படுமிடத்து உரிமை மாற்றம் (மனைவி கணவன் பிள்ளைகள்) (வரிசை 01.02.06 இல் குறிப்பிடப்பட்ட தொகையுடன் | 500 0 |
| 10. | அனுமதிப்பத்திர உரிமையாளர்க்கு மரணம் ஏற்படுமிடத்து உரிமை மாற்றம் (உறவினர் அல்லாதோர்) (வரிசை 01.02.06 08 இல் குறிப்பிடப்பட்ட தொகை) | |
| 11. | அனுமதிப்பத்திரத்தினை புதிய முச்சக்கர வண்டிக்கு மாற்றுதல் | 250 0 |
| 12. | அனுமதிப்பத்திரத்தின் கணனிமயப்படுத்தப்பட்ட பிரதி | 50 0 |

*இணைப்பு 5 (அ)*

1. முச்சக்கர வண்டி சாரதி வைத்திய சான்றிதழ் கொண்டு செல்லாமை
2. அனுமதிப்பத்திரம் காட்சிப்படுத்தப்படாமை
3. குறிப்பு பதிவேடு நிரப்பப்படாமை
4. புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது காட்சிப்படுத்தப்படாமை
5. கட்டண அறவீடு காட்சிப்படுத்தப்படாமை
6. மேலதிகமான பிரயாணிகள் ஏற்றிச் செல்லல்
7. அனுமதிப்பத்திர இலக்கம் காட்சிப்படுத்தப்படாமை
8. அதிகார சபையின் சாரதி அனுமதிப்பத்திரம் கொண்டு செல்லாமை
9. சாரதி சீருடை அணியாமை

*இணைப்பு 5 (ஆ)*

1. சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை
2. வாகன போக்குவரத்து சட்டத்திற்குட்பட்ட ஆவணங்கள் கொண்டுசெல்லாமை
3. வேறு முச்சக்கர வண்டியின் வருமானத்தை அபகரித்தல்.

2-675

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.